## அரசுத் தேர்வுகள் இயக்ககம், சென்னை – 6

## ஜூலை 2024 –பத்தாம் வகுப்பு துணைத்தேர்வு

## தேர்வுக்கூட அனுமதிச் சீட்டுகளை இணையதளம் வழியாக பதிவிறக்கம் செய்தல் / அறிவியல் பாட செய்முறைத் தேர்வில் கலந்து கொள்ளுதல்

## செய்திக்குறிப்பு

நடைபெறவுள்ள ஜூலை 2024 பத்தாம் வகுப்பு துணைத்தேர்வெழுத அரசுத் தேர்வுத் துறையால் அறிவிக்கப்பட்ட நாட்களில் விண்ணப்பித்த அனைத்து தனித்தேர்வர்களும் (தட்கல் உட்பட) 24.06.2024 (திங்கட்கிழமை) பிற்பகல் முதல் www.dge.tn.gov.in என்ற இணையதளம் வழியாக தேர்வுக் கூட அனுமதிச் சீட்டுகளை பதிவிறக்கம் செய்து கொள்ளலாம்.

www.dge.tn.gov.in என்ற இணையதளத்திற்குச் சென்று **"HALL TICKET"** என்ற வாசகத்தினை **"Click"** செய்த பின்னர் தோன்றும் பக்கத்தில் **SSLC - JULY 2024 SUPPLEMENTARY EXAMINATION – HALL TICKET DOWNLOAD",** என்ற வாசகத்தினை **"Click"** செய்தால் தோன்றும் பக்கத்தில், தேர்விற்கு விண்ணப்பித்தவர்கள், விண்ணப்ப எண் (APPLICATION NUMBER) அல்லது நிரந்தரப்பதிவெண் (PERMANENT REGISTER NO) மற்றும் பிறந்த தேதியினைப் (DATE OF BIRTH) பதிவு செய்து தேர்வுக்கூட அனுமதிச் சீட்டினைப் பதிவிறக்கம் செய்து கொள்ள வேண்டும்.

பத்தாம் வகுப்பு அறிவியல் பாட செய்முறைத் தேர்விற்கு விண்ணப்பித்துள்ள தனித் தேர்வர்கள் 25.06.2024 (செவ்வாய்க்கிழமை) முதல் 26.06.2024 (புதன்கிழமை) வரையிலான நாட்களில் அறிவியல் பாட செய்முறைப் பயிற்சி வகுப்புகள் நடைபெற்ற பள்ளிகளிலேயே செய்முறைத்தேர்வு நடைபெறவுள்ளது. மேலும், கூடுதல் விவரங்களுக்கு சம்பந்தப்பட்ட மாவட்டக் கல்வி அலுவலர்களை நேரில் அணுகி பெற்றுக் கொள்ளுமாறு அறிவுறுத்தப்படுகிறார்கள்.

உரிய தேர்வுக் கூட அனுமதிச் சீட்டின்றி எந்த ஒரு தேர்வரும் தேர்வெழுத அனுமதிக்கப்படமாட்டார்கள்.

ஒம்/–
இயக்குநர்

சென்னை – 600 006
நாள்: 19.06.2024

Padasalai.Net